மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.15/2022 நாள்– 20.03.2024

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. A.C.பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– ஜெகஜோதி (வா.சா.2) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் தாக்கல் செய்வதற்காக சொத்து விபரம் பற்றி நான் தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் அன்று வழக்கறிஞரை பார்க்க செல்லவில்லை. எனது சகோதரி மற்றும் தாயார் வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்த பிராதில் சொல்லப்பட்டுள்ள சொத்து விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அந்த விபரம் தெரியாது. நீதிமன்றத்திலிருந்து பிரச்சினைக்குரிய இடத்தை அளப்பதற்காக வருவதாக சொன்ன போது எனது அம்மாவும், தங்கையும் என்னுடன் எங்கள் ஊரான தர்மத்துப்பட்டி இருந்தார்கள். எனது தாயார் வயதானவர் என்பதாலும், எனது சகோதரி ஊனமுற்றவர் என்பதாலும் சொத்தை அளப்பதற்காக நான் வந்தேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்ய

வந்த போது தாவா சொத்தில் நான் இல்லை என்றாலும், தற்போது எனது தாயார் மற்றும் சகோதரிக்கு அனுசரணையாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரச்சினைக்குரிய சொத்திற்கான அளவுகள் மற்றும் நான்குமால்கள் தெரியுமா என்றால் தெரியும். நான்குமால்கள் விபரமானது கிழக்கு பக்கம் ரோடு, வடக்கு பக்கம் ரோடு, தெற்கு பக்கம் தேவதாஸின் வீடு, மேற்கு பக்கம் கோபால்சாமி இடம் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளக்க வந்தபோது எங்கள் வீட்டிற்கும் பிரதிவாதிகளின் வீட்டிற்கும் இடையில் 3 அடி குழி தோண்டப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் காங்கிரிட் அமைத்துள்ளதால் 1 அடி மட்டுமே தோண்டினேன். அதற்கு அடியில் பைப் உள்ளதால் தோண்டும் போது பைப் உடைந்தால் நான் தான் சரி செய்து கொடுக்க வேண்டும் என்று எதிர் தரப்பினர் சொல்லி சண்டைக்கு வந்ததால், தோண்டுவதை விட்டுவிட்டேன். அவ்வாறு குழி தோண்டிய போது குழாயை பார்த்தேனா என்றால் நான் தோண்டியது 1 அடி என்பதாலும், 2 அடிக்கு கீழே தான் பைப் உள்ளது என்றாலும், நான் பார்க்கவில்லை. அன்றைய தினம் 3 1/2 அடிக்கு மேல் தோண்டப்பட்டது என்றாலும், அதில் குழாய் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தான் 1 அடி தோண்டினேன். அந்த இடத்தில் குழாய் இல்லை என்ற விபரம் எனக்கு தெரிந்து கொண்டே நான் மேற்படி விதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் பிரதிவாதிகள் எங்களிடம் எந்த இடையூறும் செய்யவில்லை என்றாலும், நீதிமன்ற ஆணையர் வந்த போது குழி தோண்டுவதற்கு எவ்வித பிரச்சினையும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது வீட்டிற்கு சுவற்றிற்கு தென்புறத்தில் 2 அடி இடம் எங்களது இடத்தை நிர்ணையம் செய்வதற்காக விட்டுவிட்டு அதை ஒட்டியே தரையிலிருந்து 2 அடி உயரத்தில் தடுப்புசுவர் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் எனது தகப்பனார் 2 அடி இடம் விட்டு கட்டினார். என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்பட நகலில் உள்ள வெள்ளை கலர் சுவர் மற்றும் அதை ஒட்டியுள்ள 2 அடி சுவரும் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதற்கு அடுத்துள்ள எல்லை கல்லும் எங்கள் இடத்திற்குள் தான் உள்ளது. பிரதிவாதிகள் வைத்துள்ள பிளாஸ்டிக் பைப்பானது ஆரம்பத்தில் பிரதிவாதிகளின் இடத்தில் இருந்தாலும் கூட போக போக பூமிக்கு அடியில் எங்கள் நிலத்திற்குள்ளேயே

பதிக்கப்பட்டது. அந்த பிளாஸ்டிக் குழாய் பதிக்கப்பட்ட பிறகு 2 அடி சுவர் கட்டப்பட்டதா அல்லது 2 அடி சுவரை கட்டிய பின் பிளாஸ்டிக் குழாய் பதிக்கப்பட்டதா என்றால் பிளாஸ்டிக் குழாய் பதிக்கப்பட்ட பிறகே எனது தகப்பனார் 2 அடி சுவரை மேலேழுந்த வாரியாக கட்டியுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படத்தில் பிளாஸ்டிக் குழாயானது அந்த 2 அடி சுவருக்கு தெற்குபுறத்தில் பிரதிவாதிகளின் இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுடைய இடத்தில் தான் உள்ளது. பிரதிவாதிகள் அந்த இடத்தை தோண்டிய போது பிரதிவாதிகளின் இடத்திற்குள் தான் பிளாஸ்டிக் குழாய் செல்கிறது என்றால் சரிதான். ஆனால் போக போக அந்த பிளாஸ்டிக் குழாய் 10 அடிக்கு உள்ளே போனால் எங்களுடைய இடத்திற்குள் தான் செல்கிறது. அந்த காங்கிரிடானது எனது தகப்பனாரல் ஏற்படுத்தப்பட்டது. அதை உடைத்து தான் அன்று பார்த்தோம். பிரதிவாதிகள் அவர்களுடைய இடத்திற்குள் தான் குழாய் பதித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தாயாரும், சகோதரி பொய்யாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான் அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளக்க வந்த போது நான் அந்த இடத்திலேயே இல்லை என்றாலும், எங்களுக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை நகலை வைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.